# சமர்ப்பணம்

“அன்புடனும், பக்தியுடனும் யாரொருவர் எனக்கு ஓர் இலை, மலர், பழம் அல்லது நீரை சமர்ப்பிக்கிறாரோ, அந்தத் தூய்மையான தன்னடக்கமுடையவருடைய அன்புக் காணிக்கையானது ஆர்வத்துடனும், தாமதமின்றியும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது”

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்
பகவத்கீதை அத். 9 : ஸ்லோகம் 26

அந்தர்யாமியாய் விளங்கும்

ஸ்ரீ சாயிபாபாவுக்கு

இப்பணியினையும் என்னையும் சமர்ப்பிக்கிறேன்.

# பொருளடக்கம்

அத்தியாயம் பக்கம்

தமிழ் பதிப்பின் முன்னுரை
(மொழிபெயர்ப்பாளருடையது)

மொழி பெயர்ப்பாளரின் முன்னுரை
(இரண்டாம் பதிப்பு)

மொழி பெயர்ப்பாளரின் முன்னுரை
(பதினோராம் பதிப்பு)

1. நமஸ்காரங்கள் : பாபா கோதுமை மாவு அரைத்த நிகழ்ச்சியும் அதன் தத்துவ உட்கருத்தும் 1

2. இப்பணியைச் செய்வதன் நோக்கம் - இஃதை மேற்கொள்வதில் உள்ள திறமையின்மையும், துணிவின்மையும் - காரசார விவாதம் - குறிப்பிடக்கூடியதும் முனிவருடைய பட்டமுமான ஹேமத்பந்தை வழங்குதல் - குருவின் அவசியம். 6

3. சாயிபாபாவின் அனுமதியும் வாக்குறுதியும் - அடியார்க்கு இடப்பட்ட திருப்பணிகள் - பாபாவின் நிகழ்ச்சிகள் வழிகாட்டும் விளக்குகள்- அவரின் தாயன்பு - ரோஹிலாவின் கதை - பாபாவின் சுவையும் அமுதமுமான மொழிகள். 17

4. ஷீர்டிக்கு சாயிபாபாவின் முதல் விஜயம் - ஞானிகளின் வருகை - ஷீர்டி ஒரு புண்ணிய

தீர்த்தம் - சாயிபாபாவின் தோற்றம் - கௌலிபுவாவின் கருத்து - விட்டலின் பிரசன்னம் - க்ஷீர்சாகரின் கதை - பிரயாகையில் தாஸ்கணுவின் குளியல் - சாயிபாபாவின் அயோனி ஜன்மமும் அவரின் முதல் ஷீர்டி விஜயமும் - மூன்று சத்திரங்கள். 26

5. சாந்த்பாடீலின் கல்யாண கோஷ்டியுடன் பாபாவின் வருகை - வரவேற்கப்பட்டு சாயி என அழைக்கப்படுதல் மற்ற ஞானிகளுடன் தொடர்பு - அவருடைய உடையும் அன்றாட நிகழ்ச்சி நியதிகளும் - பாதுகைகளின் கதை - மொஹிதினுடன் மல்யுத்தப் பயிற்சியும், வாழ்க்கையில் மாற்றமும் - தண்ணீரால் விளக்கெரித்தல் - போலி குரு ஜவ்ஹர் அலி. 38

6. குருவின் கை தீண்டலினால் ஏற்படும் பயன் - ராமநவமித் திருவிழா - அதன் ஆரம்பம், மாறுதல்கள் முதலியன - மசூதி பழுதுபார்த்தல். 51

7. வியத்தகு அவதாரம் - சாயிபாபாவின் குணாதிசயங்கள்- அவரின் யோக சாதனைகள்- அவரின் எங்கும்நிறை தன்மை - குஷ்டரோக அடியவனின் சேவை - குழந்தை கபர்டேயின் பிளேக் வியாதி - பண்டரீபுரத்துக்குச் செல்லல். 65

8. மானிடப் பிறவியின் சிறப்பு - சாயிபாபா உணவுப்பிச்சையெடுத்தல் - பாயஜாபாயின் சேவை - சாயிபாபாவின் படுக்கை - குஷால்சந்திடம் அவருக்கு உள்ள பிரேமை. 78

9. விடைபெறும்போது சாயிபாபாவின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிதல் - கீழ்ப்படியாதிருத்தலின் விளைவு - சில நிகழ்ச்சிகள் - பிச்சை எடுப்பதும் அதன் அவசியமும் - பக்தரின் (தர்கட் குடும்பத்தின்) அனுபவம் - பாபா எவ்வாறு திருப்தியுடன் உண்பிக்கப்பட்டார். 88

10. சாயிபாபாவின் வாழ்க்கை நடைமுறை - அவர் படுக்கும் பலகை - ஷீர்டியில் அவரின் வாசம் - அவரின்அறிவுரைகள் - அவரின் பணிவு - மிகவும் எளிய வழி. 99

11. சகுணப் பிரம்மமாக சாயி - டாக்டர் பண்டிட்டின் வழிபாடு ஹாஜி சிதிக்ஃபால்கே - பஞ்சபூதங்களின்மேல் பாபாவின் கட்டுப்பாடு. 111

12. சாயி லீலைகள் - (1) காகா மஹாஜனி, (2) வக்கீல் துமால், (3) திருமதி நிமோண்கர், (4) முலே சாஸ்திரி, (5) ஒரு டாக்டர் ஆகியோரின் அனுபவங்கள். 119

13. மேலும் பல சாயி லீலைகள் - வியாதிகள் குணமாக்கப்படுதல் (1) பீமாஜி பாடீல், (2) பாலா ஷிம்பி, (3) பாபு சாஹேப் பூட்டி, (4) ஆலந்தி ஸ்வாமி,(5) காகா மஹாஜனி, (6) ஹர்தாவைச் சேர்ந்த தத்தோபந்த். 127

14. நாந்தேடைச் சேர்ந்த ரத்தன்ஜி வாடியா - மௌலா சாஹேப் முனிவர் - தக்ஷிணை சாஸ்திரம் - மீமாம்ஸம். 135

15. நாரத இசைமுறை - சோல்கரின் சர்க்கரை இல்லாத தேநீர் - இரண்டு பல்லிகள். 146

16. & 17. துரித பிரம்மஞானம் & இவ்விரண்டு அத்தியாயங்களும் சாயிபாபாவிடமிருந்து துரிதமாக பிரம்மஞானத்தைப் பெற விழைந்த ஒரு செல்வந்தரின் கதையைப் பற்றிக் கூறுவதாகும். 152

18. & 19. ஹேமத்பந்த் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார் - திருவாளர் சாதே, திருமதி. தேஷ்முக்கின் கதைகள் - நல்ல எண்ணங்களின் அவா நிறைவேற்றத்தை ஊக்குவித்தல் - உபதேச வகைகள் - அவதூறு பேசுவது பற்றியும், உழைப்புக்கு ஊதியம் கொடுப்பது பற்றியும் போதனைகள். 163

20. தாஸ்கணுவின் பிரச்சினை காகாவின் வேலைக்காரப் பெண்ணால் தீர்ந்தது. 187

21. (1) திரு.V.H. டாகூர், (2) அனந்தராவ் பாடண்கர், (3) பண்டரீபுரத்து வக்கீல் ஆகியோரின் கதைகள். 196

22. பாம்புக்கடியிலிருந்து மீட்புதவி - (1) பாலா சாஹேப் மிரீகர், (2) பாபு சாஹேப் பூட்டி, (3) அமீர் ஷக்கர், (4) ஹேமத்பந்த் - பாம்புகளைக் கொல்வதைப் பற்றிப் பாபாவின் கருத்து. 205

23. யோகமும், வெங்காயமும் - பாம்புக் கடியினின்று ஷாமா குணமாக்கப்படுதல் - வாந்தி பேதியின்

(காலரா) கட்டளைகள் மீறப்பட்டன - குரு பக்திக்குக் கடுமையான சோதனை. 215

24. பாபாவின் தமாஷும் வேடிக்கையும் - சணா லீலை (1) ஹேமத்பந்த், (2) சுதாமர், (3) அண்ணா சிஞ்சணீகரும் மௌஷிபாயியும். 225

25. அஹமத் நகர் தாமு அண்ணா - (1) வியாபார விவகாரம் (2) மாம்பழ லீலை. 234

26. (1) பக்த பந்த், (2) ஹரிச்சந்திர பிதலே, (3) கோபால் ஆம்ப்டேகர் ஆகியோரின் கதைகள். 243

27. விஷ்ணு ஸஹஸ்ரநாமம், ஸ்ரீமத் பாகவதம் ஆகியவற்றைக்கொடுத்து அனுகூலம் செய்தல் தீக்ஷித்தின் விட்டல் காட்சி - கீதா ரஹஸ்யம் - கபர்டே குடும்பம். 252

28. ஷீர்டிக்கு இழுக்கப்பட்ட சிட்டுக் குருவிகள் (1) லக்ஷ்மிசந்த், (2) புர்ஹாண்பூர் மாது, (3)மேகா. 263

29. (1) சென்னை பஜனை சங்கம், (2) டெண்டுல்கர் (தகப்பனாரும் மகனும்), (3) டாக்டர் கேப்டன் ஹாடே, (4) வாமன் நார்வேகர் ஆகியோரின் கதைகள். 274

30. (1) வணியைச் சேர்ந்த காகாஜி வைத்யா, (2)பம்பாயைச் சேர்ந்த பஞ்சாபி ராம்லால். 284

31. (1) சந்நியாசி விஜயானந்த், (2) பாலாராம் மான்கர், (3) நூல்கர், (4) மேகா, (5) புலி இவர்களெல்லாம் பாபாவின் முன்னிலையில் உயிர் நீத்தல். 292

32. குரு - கடவுள் தேவை - பட்டினி அங்கீகரிக்கப்படவில்லை. 301

33. உதியின் பெருமை
தேள்கடி - பிளேக் வியாதிகள் குணமாக்கப்படுதல் -ஜாம்நேர் அற்புதம் - நாராயண்ராவின் வியாதி - பாலாபுவா சுதார் - அப்பா சாஹேப் குல்கர்ணி, ஹரிபாவ் கர்ணிக். 312

34. உதியின் பெருமை (தொடர்ச்சி)
(1) டாக்டரின் சகோதரியின் மகன், (2) டாக்டர் பிள்ளை, (3) ஷாமாவின் மைத்துனி, (4)ஈரானியப் பெண், (5) ஹர்தா கனவான், (6) பம்பாய்ப் பெண்மணி. 325

35. சோதிக்கப்பட்டுப் போதாக்குறை ஏதுமில்லை எனக் கண்டுணர்தல் - காகா மஹாஜனியின் நண்பரும், எஜமானரும் - பாந்த்ராகாரரின் தூக்கமின்மை வியாதி - பாலாஜி பாடீல் நெவாஸ்கர். 334

36. (1) இரண்டு கோவா கனவான்கள், (2) திருமதி ஔரங்காபாத்கர் ஆகியோரின் அற்புதக் கதைகள். 345

37. சாவடி ஊர்வலம். 355

38. பாபாவின் ஹண்டி - கோவிலை மதிக்காதிருத்தல் - காலா அல்லது கதம்ப உணவு - ஒரு கிண்ணம் மோர். 362

39. & (50) பாபாவின் சமஸ்கிருத ஞானம் - கீதையின் ஒரு ஸ்லோகத்திற்கு பாபாவின் பொருள் விளக்கம் - சமாதி மந்திர் கட்டுதல். 371

40. பாபாவின் கதைகள்
(1) திருமதி தேவின் ‘உத்யாபன்’ விழாவிற்கு ஒரு சந்நியாசிபோல் மற்ற இருவருடன் செல்லுதல் (2) ஒருசித்திர ரூபத்தில் ஹேமத்பந்தின் வீட்டுக்குச் செல்லுதல். 383

41. சித்திரத்தின் கதை - கந்தல் துணி திருடுதலும், ஞானேஷ்வரி பாராயணமும். 390

42. பாபா மஹா சமாதியடைதல் :
முன்பாகவே உணர்த்திய குறிப்பு - ராமச்சந்திர தாதா பாடீல், தாத்யா கோதே பாடீல் இவர்கள் மரணம் தவிர்த்தல் - லக்ஷ்மிபாய் ஷிண்டேவுக்கு தர்மம் செய்தல் - கடைசி நேரம். 398

43. & 44. பாபா மஹா சமாதியடைதல் (தொடர்ச்சி) : ஏற்பாடுகள் - சமாதி மந்திர் (கோவில்) - செங்கல் உடைதல் - 72 மணி நேர சமாதி - ஜோகின் துறவு - பாபாவின் அமுத மொழிகள். 407

45. காகா ஸாஹேபின் ஐயமும், ஆனந்த்ராவ் கண்ட காட்சியும் - மரப்பலகை பாபாவின் படுக்கைக்கானது, பகத்தினுடையது அல்ல! 418

46. பாபாவின் கயா பயணம் - ஆடுகளின் கதை. 426

47. பாபாவின் பூர்வஜென்ம ஞாபகங்கள் - வீரபத்ரப்பா, சனபஸப்பா (பாம்பு, தவளை) இவர்களின் கதை. 433

48. அடியவர்களின் அல்லலை அகற்றுதல் - (1) ஷேவடே, (2) சபட்ணேகர் ஆகியோரின் கதைகள். 442

49. (1) ஹரி கானோபா, (2) ஸோமதேவ் ஸ்வாமி, (3) நானா சாஹேப் சாந்தோர்கர் ஆகியோரின் கதைகள். 451

50. (1) காகா சாஹேப் தீக்ஷித், (2) ஸ்ரீ தேம்பே ஸ்வாமி, (3) பாலாராம் துரந்தர் ஆகியோரின் கதைகள். 459

முடிவுரை 469

ஆரத்தி 474

ஸ்ரீ சாயிபாபா அஷ்டோத்ர சதநாமவளி 476

ஓம்

ஸ்ரீ சாயிராம்

# தமிழ் பதிப்பின் முன்னுரை

(முதற் பதிப்பு)

1964ஆம் ஆண்டு முதல் கோயமுத்தூர் ஸ்ரீ நாகசாயி மந்திருக்கு அடிக்கடி செல்லும் பாக்கியம் பெற்றிருந்தேன். ஷீர்டி சாயிபாபா அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை அறிய விழையும் தூண்டுதலால் அப்போது அங்கு இருந்த திரு. A.V.K சாரி அவர்களிடமிருந்து ஸ்ரீ சாயி சத்சரிதம் என்னும் நூலின் ஆங்கிலப் பதிப்பை வாங்கிப் படித்தேன்.

ஸ்ரீ சாயி சத்சரிதத்திற்கு என உரிய தனிச்சிறப்புகளாவன

1. சத்சரிதம் பாபா இவ்வுலகத்தில் வாழ்ந்திருந்தபோதே அவரால் ஆசீர்வாதம் செய்யப்பட்டு திரு. ஹேமத்பந்த் அவர்களால் எழுதப்பட்டது.

2. இந்நூலைக் குளித்தபின் ஆசாரம், அன்பு, நம்பிக்கையுடன் எவரெவர் ஒரு வாரத்தில் படித்து முடிக்கிறார்களோ அவர்களுடைய கேடுகள் அழிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. இந்நூலைப் படிப்பதால் என்னென்ன நலன்கள் கிடைக்கும் என்பதைப் பிற்சேர்க்கையில் காணலாம்.

3. கிறிஸ்தவர்களுக்குப் பைபிளும், முஹமதியர்களுக்குக் குரானும், சைவர்களுக்குத் தேவாரம், திருவாசகம், வைணவர்களுக்குத் திவ்வியப் பிரபந்தமும் எவ்வாறு உயர்ந்ததாகக் கருதப்படுகிறதோ அவ்வளவு முக்கியம் வாய்ந்த நூலாக ஷீர்டி சாயி பக்தர்களுக்கு 'ஸ்ரீ சாயி சத்சரிதம்' கருதப்படுகிறது.

பின்னர் இந்நூல் இதுகாறும் தமிழ் மொழியில் வெளிவராதது அறிந்து அதை நான் தமிழில் மொழிபெயர்க்க விரும்பினேன்.

இது குறித்து 1966-ஆம் ஆண்டில் ஷீர்டி சமஸ்தானத்திற்கு எழுதிக் கேட்டேன். அப்போது இருந்த கோர்ட் ரிஸீவர் திரு. B.G. போட்னிஸ் அவர்கள் என்னை ஊக்குவிக்குமுகமாகப் பதில் எழுதினார்.

தொடர்ந்த பல கடிதப் போக்குவரவுகளுக்குப் பின்னர் 1968ஆம் ஆண்டில் பம்பாய் ஹானரரி சிட்டி சிவில் கோர்ட்டார் நான் தமிழில் சத்சரிதத்தைப் பதிப்பிப்பதை அங்கீகரித்து இருப்பதாக அப்போதைய ரிஸீவர் திரு. D.D. பதன்கர் அவர்கள் மூலம் எனக்குத் தெரிவித்தனர். பல்வேறு காரணங்களால் இந்நூலை அப்போதே வெளியிட இயலவில்லை. இது குறித்து மீண்டும் சமஸ்தானத்திற்கு ஜூன் 1980ல் எழுதி Mr. K.H. கக்ரே அவர்களின் செயல்முறை திட்டப்படி மீண்டும் இந்நூலை வெளியிடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வெற்றிபெற்றேன்.

ஷீர்டி சாயிபாபாவின் மகத்தான கருணையும், ஆசியுமே இப்புத்தகத்தை நன்முறையில் வெளியிடும் என் முயற்சியை சிறப்புற ஈடேற்றி வைத்தது.

எனது முயற்சியில் முன்னர் என்னை ஊக்குவித்த எனது தாயார் காலம்சென்ற வேதாம்பாள் அவர்களை மரியாதையுடன் நினைவு கூர்கிறேன். தற்போது என்னை ஊக்குவித்துக்கொண்டும், உறுதுணை புரிந்துகொண்டும் இருக்கும் என் தந்தையார் திரு. R. சொக்கலிங்கம் அவர்களுக்கும், என் தமையனார் திரு. C. முத்தையா, M.Sc., அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை நல்லமுறையில் அச்சேற்றி அழகான நூலாக உருவாக்கி வழங்கிய புதுக்கோட்டை M/s. சர்மாஸ் சானடோரியம் அச்சகத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக இந்நூலைப் பதிப்பிப்பதற்கு ஒப்புதல் வழங்கிய ஷீர்டி சாயி சமஸ்தானத்துக்கும், எனது மொழிபெயர்ப்பு புத்தக உருவில் வெளிவர தக்க முயற்சிகளை உடனே எடுத்த தற்போதைய சமஸ்தான ரிஸீவர் திரு. K.H. கக்ரே அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெய் சாயிராம்

அன்பன்,

**சொக்கலிங்கம் சுப்பிரமணியன்**

தேதி : 2.10.1980

**காந்தி ஜெயந்தி**

ஓம்

ஸ்ரீ சாயிராம்

# மொழிபெயர்ப்பாளரின் உரை

(15வது பதிப்பு)

ஷீரடி சாயிநாதரின் அளவற்ற கருணையினாலும் நிகரற்ற அன்பாலும் எண்ணற்ற சாயி பக்தர்களின் இடையீடு அற்ற பிரார்த்தனைகளாலும் தங்கள் கரங்களில் இந்த 15வது பதிப்பு திகழ்கின்றது. ஸ்ரீ சாயிசத்சரித்திரம், பாபா பக்தர்களுக்கு அருளிய வரப்பிரசாதம் அரிய பொக்கிஷம். இதில் உள்ள பாபாவின் அற்புதமான வாக்குறுதிகளையும் உறுதி மொழிகளையும் பக்தர்கள் கருத்தூன்றி பயின்று பலனடைய வேண்டுகிறேன்.

இந்த 15வது பதிப்ப வருவதில் பரிபூரண ஒத்துழைப்பு நல்கிய ஷீரடி சாயி சமஸ்தான் அதிகாரிகளுக்கும், அரும்பணி ஆற்றிய சிதம்பரம் சாயிபக்தர் திரு. மஹாதேவன்B.E., அவர்களுக்கும், உதவிகோரியபோதெல்லாம் வந்து ஒத்துழைப்பு நல்கிய சாக்கோட்டை திரு. இரா.செந்தில் B.A., அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இதன் மூலம் உரித்தாக்குகிறேன்.

ஜெய் ஸ்ரீ சாயிராம்

ஸ்ரீசாயி சேவையில் அன்புடன்
சொக்கலிங்கம் சுப்ரமணியன்

தேதி : 11.09.2010
விநாயக சதுர்த்தி
கும்பகோணம்.